**QP – 082**

**III Semester B.Com./B.B.A./B.H.M. Examination, March/April 2022**
**(CBCS) (Freshers and Repeaters) (2020-21 and Onwards)**
**TAMIL LANGUAGE (Paper – III) (Part – I)**

Time : 3 Hours | Max. Marks : 70

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1) 'இலக்கிய மகரந்தம்' என்னும் நூலின் ஆசிரியர்

1) வ.உ சிதம்பரனார் 2) சு. சமுத்திரம்
3) பாரதியார் 4) க. இராமச்சந்திரன்

2) தமிழ் மொழியின் உயிர்மெய் எழுத்துகள்

1) 216 2) 30
3) 246 4) 247

3) குறிஞ்சி நிலத்தின் தெய்வம்

1) இந்திரன் 2) திருமால்
3) முருகன் 4) வருணன்

4) 'இரங்கலும் இரங்கலின் நிமித்தமும்'-எந்நிலத்தின் உரிப்பொருள்

1) குறிஞ்சி 2) முல்லை
3) மருதம் 4) நெய்தல்

5) வெட்சித் திணை என்பது

1) ஆநிரை கவர்தல் 2) ஆநிரை மீட்டல்
3) ஆநிரையைத் தப்பிக்கவிடுதல் 4) ஆநிரையைப் பங்கிடுதல் **(5×1=5)**

II. விரிவான விடை தருக.

1) முயற்சியின் மேன்மைகளை நாலடியார் பாடல்கள் வழிநின்று விளக்குக.

(அல்லது)

மாந்தரின் மனநோயைப் போக்கும் திரிகடுகப் பாடல்களின் கருத்துகளைத் தொகுத்து வரைக. **8**

2) ஆபுத்திரனின் பிறப்பும் வளர்ப்பும் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆபுத்திரனுக்கு நேர்ந்த கொடுமைகளை மணிமேகலை எவ்வாறு சித்தரிக்கின்றது ? 8

III. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

1) வாளாடு கூத்தியர் கண்போல் தடுமாறும்
தாளாளர்க்கு உண்டோ தவறு

(அல்லது)

மாசுபடினும் மணிதன்சீர் குன்றாதாம்
பூசிக் கொளினும் இரும்பின்கண் மாசொட்டும் 4

2) கள்ள வினையிற் கடுந்துயர் பாழ்பட
நள்ளிருட் கொண்டு நடக்குவன்

(அல்லது)

காணார் கேளார் கால்முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக்கு உற்றோர்
யாவரும் வருக 4

IV. 'இலக்கிய மகரந்தம்' என்னும் நூலில் இருந்து பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விரிவான விடை தருக.

1) கரிசல் மண்ணின் பழமொழிகள்.

2) உரைநடையும் நவீனத்துவமும்.

3) இதழ்களில் சுஜாதாவின் எழுத்துகள்.

4) நாயகம் ஒரு காவியத்தில் வகைமைக்கூறுகள். **(2×7=14)**

V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1) முதல் எழுத்துகள் குறித்து எழுதுக.

2) குற்றியலுகரத்தின் வகைகளைச் சான்றுடன் கூறுக.

3) ஆகுபெயர் என்றால் என்ன ? சினையாகு பெயரினைச் சான்றுடன் விளக்குக.

4) குறிஞ்சி நிலத்தின் கருப்பொருள்களைக் கூறுக.

5) அகத்திணைக்குரிய உரிப்பொருளைக் குறிப்பிடுக.

6) தளை என்றால் என்ன ? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

7) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தைக் கூறுக.

8) வஞ்சப் புகழ்ச்சி அணியினை விளக்கி வரைக. **(5×4=20)**

VI. ஏதேனும் ஒன்றுக்குக் கோப்புத் தயார் செய்க.

1) உங்கள் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டு விழாவிற்குப் போடப்பட்டிருந்த பந்தல் மற்றும் இருக்கைகளுக்கான பணம் செலுத்த வேண்டியதைக் குறித்து கணக்குப் பிரிவு மேற்பார்வையாளர் என்ற நிலையில், கல்லூரி முதல்வருக்குக் கோப்பு ஒன்று தயார் செய்து அனுப்புக.

2) நீங்கள் பணிபுரியும் வங்கியின் கிளையினை பெங்களூரில் உள்ள எலக்ட்ரானிக் நகரத்தில் திறக்க வேண்டி, அவ் வங்கியின் மேலாளர் என்ற நிலையில் அதன் நிர்வாக பொது மேலாளருக்குக் கோப்பு ஒன்றைத் தயார் செய்து அனுப்புக. **(1×7=7)**

---